මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව

முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்

DEPARTMENT OF MUSLIM RELIGIOUS AND CULTURAL AFFAIRS



කාර්ය සාධන වාර්තාව - 2021

முன்னேற்ற அறிக்கை – 2021

PERFORMANCE REPORT – 2021

DEPARTMENT OF MUSLIM RELIGIOUS AND CULTURAL AFFAIRS
180, T.B. JAYAH MAWATHA,

உள்ளடக்கம்

அத்தியாயம் 01 – நிறுவனத்தின் தோற்றப்பாடு / நிறைவேற்றுப் பொழிப்பு 1
1.1 அறிமுகம் 1
1.2 நிறுவனத்தின் துரர நோக்கம், பணிக்கூற்று மற்றும் குறிக்கோள் 2
1.3 நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகள் 2
1.4 நிறுவன ஒழுங்கமைப்பு....4
1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் 5
1.6 அமைச்சு/திணைக்களம்/மாகாண சபைகளின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள் /நிதி .10
1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (இருப்பின்) 10
அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்....11
2.1 சிறப்பு அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகளை சுருக்கமாக விளக்கு .11
அத்தியாயம் 03 – 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை....14
3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று....14
3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று....15
3.3 காசுப் பாய்ச்சல் கூற்று 16
3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்....17
3.5 வருமானம் சேகரிப்பு செயலாற்றுகை 22
3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை 23
3.7 நி.பி. குறிப்பு 208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள் /திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம் /மாவட்டச் செயலகம் /மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு....23
3.8 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை....24
3.9 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 25
அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்....37
4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்) ..37
அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை...38
5.1 அடையாளம காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை சுட்டிக் காட்டுக.....38
5.2 பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகள் மற்றும் சவால்கள் பற்றிய சுருக்க விளக்கம்....38
அத்தியாயம் 06 மனித வள விபரம்....39
6.1 பதவியணி முகாமைத்துவம் 39
6.2 பற்றாக்குறை அல்லது அதிகப்படியான மனித வளங்கள் நிறுவனத்தின் செலாற்றுகையினை எவ்வாறு தாக்கம் செலுத்தியுள்ளது என்பதை சுருக்கமாக விபரித்தல் 39
6.3 மனிதவள அபிவிருத்தி....40
அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை 41

2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

நிறுவனத்தின் பெயர் : முஸ்லிம் சமய மற்றம் கலாசார அலுவல்கள் திணைக்களம்
செலவுத் தலைப்பு இலக்கம் : 202

அத்தியாயம் 01 – நிறுவனத்தின் தோற்றப்பாடு / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

முஸ்லிம் சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களமானது புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்களை மேம்படுத்துவதற்காக செயற்படுகின்ற நிறுவனமாக இயங்கிவருகின்றது. **"நிலையான வளர்ச்சி அடைந்த ஒரு தேசம்"** எனும் தொலை நோக்கை அடிப்படையாகக் கொண்டு சமுதாயத்தின் முன்னேற்றம் மற்றும் நல்வாழ்வுக்கான ஒட்டுமொத்த செயற்பணியையும் ஒழுங்குறுத்தும் பொறுப்பை இத்திணைக்களம் கொண்டுள்ளது.

1962 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க மற்றும் 1982 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1956 ஆம் ஆண்டு 51 ஆம் இலக்க வக்பு சட்டத்தினால் நோக்காகக் கொள்ளப்பட்ட செயற்பணிகளை நிறைவேற்றுவதற்காக ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை வக்பு சபை மற்றும் வக்பு தீர்ப்புச் சபை ஆகிய நிறுவனங்களுடன் நல்லதொரு ஒருங்கிணைப்பைப் பேணிவருவதுடன், வக்பு சட்டத்தின் நோக்கங்களுக்கு அமைவாக முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களை பதிவு செய்தல், பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் பள்ளிவாசல்கள், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் முஸ்லிம் அறக்கட்டளைகளின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் சிறந்த முறையில் நிறைவேற்றக்கூடியவாறு நிருவாக நடவடிக்கைகளை அமுல்படுத்துவது இத்திணைக்களத்தின் செயற்பணிகளில் உள்ளடங்குகின்றது. வக்பு சட்டத்தினால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள நிருவாக செயற்பாடுகளை உள்ளடக்கியதாக, முஸ்லிம் சமய மற்றும் கலாசார தனித்துவ அடையாளத்தை பேணுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு சமூகத்தின் நலனுக்கான நலன்புரி வசதிகளைச் செய்து கொடுத்து சகல இடங்களிலும் செயற்படுதல் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்கள், வழிபாட்டுத்தலங்கள், மற்றும் அறக்கட்டளை நிதியங்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், மத்ரஸா, அறபுக் கல்லூரிகள், அறநெறிப் பாடசாலைகள் (பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளுக்கு அல்குர்ஆனை ஓதுவதற்கு கற்றுக் கொடுத்தல் மற்றும் தஹம் பாடசாலை கல்வி போன்றன) மற்றும் ஹஜ் யாத்திரை, அத்துடன் முஸ்லீம் கலை, இலக்கியம் மற்றும் கலாச்சாரத்தை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவை திணைக்களத்தின் செயல்பாடுகளாகும்.

1.2 நிறுவனத்தின் துரர நோக்கம், பணிக்கூற்று மற்றும் குறிக்கோள்

துார நோக்கம்

"நிலையான அபிவிருத்தி அடைந்த ஒரு தேசம்"

பணிக்கூற்று

நேர்மையான மற்றும் ஒழுக்கமான சட்டத்தை மதிக்கும் சமுதாயத்தை பாதுகாக்க முஸ்லிம் மத மற்றும் கலாச்சார விவகாரங்களை ஒழுங்குபடுத்துதல் மற்றும் வசதிகளைச் செய்துகொடுத்தல்.

இலக்குகள்

1. சமயப் பெறுமானங்களை நடைமுறைக்குப் பொருத்தமானவாறு சமூகமயப்படுத்தல்.
2. இலங்கையின் தனித்துவ அடையாளத்தினை கொண்டுள்ளதொரு சமூகத்தை உருவாக்குதல்

குறிக்கோள்

1. முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் அறநெறிப் பாடசாலைகள், அறக்கட்டளைகள், அறபுக் கல்லூரிகள் (மத்ரஸா) மற்றும் முஸ்லிம் தஹம் பாடசாலைகளை வழிப்படுத்தல் மற்றும் ஒழுங்குறுத்தல்.
2. இஸ்லாமிய சமயக் கல்வியை வளப்படுதலும், மேம்படுத்துதலும்.
3. முஸ்லிம் கலை மற்றும் கலாசாரங்களை வளப்படுதலும், ஊக்குவித்தலும்
4. ஹஜ் யாத்திரிகர்களுக்கு வசதிகள் மற்றும் சேவைகளை வழங்குதல்.
5. இஸ்லாமிய சமய மற்றும் கலாசாரத் துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்புச் செய்தவர்களின் சேவைகளைப் பாராட்டுதல்.
6. இஸ்லாமிய சமயக் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் (ஐவேளைத் தொழுகை, ரமழான் கால நோன்பு, ஸகாத் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றன) தேவையான வசதிகளை ஏற்படுத்தல்.
7. முஸ்லிம் சமூகத்தில் ஒற்றுமையைப் பேணிவருதல் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்காக செயற்படுதல்.
8. முஸ்லிம் பெண்கள் மற்றும் இளைஞர்களை வலுவூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல்.


1.3 நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகள்

1. **வக்பு சட்டத்தை அமுல்படுத்தல்.**

(முஸ்லிம் பள்ளிவாசல்கள், சமயத் தலங்கள் மற்றும் அறக்கட்டளைகளை பதிவு செய்தல், நம்பிக்கைப் பொறுப்பாளர்களை நியமனம் செய்து அவர்களுக்கான அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளை நிர்ணயித்தல், முஸ்லிம் அறக்கட்டளை பேணிவருதல் மற்றும் வக்பு சட்டத்தை அமுல்படுத்தல்.).

2. பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் பள்ளிவாசல்கள், முஸ்லிம் தஹும் பாடசாலைகள், அறபுக் கல்லூரிகள் ஆகிய சமய நிலையங்கள் மற்றும் கலாசார நிலையங்களின் அபிவிருத்திக்கான நிதி உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
3. ஒவ்வொரு ஆண்டும், தேசிய மீலாத்-உன்-நபி தினத்தைக் குறிக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டத்தில் சமூக மற்றும் மத மேம்பாட்டு நடவடிக்கைகள் நடத்தப்படுகின்றன. பிரதேசத்தில் உள்ள பள்ளிவாசல்கள், மத நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல், போட்டிகள் மற்றும் பரிசளிப்பு விழாக்களை ஏற்பாடு செய்தல், சமயப் பிரமுகர்களை கௌரவித்தல் மற்றும் தொடர்புடைய பிரதேசத்தின் வரலாற்று முக்கியத்துவம் பற்றிய புத்தகங்களை வெளியிடுதல் ஆகிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.
4. இலங்கை முஸ்லிம்கள் புனித ஹஜ் யாத்திரிகையை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
5. நாடு முழுவதிலும் முஸ்லிம் தஹும் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு சீருடை வழங்குதல், பாடப்புத்தக கொடுப்பனவு வழங்குதல், தஹும் பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சிப்பட்டறைகளை நடாத்தல், அறநெறிப் பாடசாலைகளுக்கு பாடவிதானத்தை அறிமுகம் செய்தல், பாடப்புத்தகங்களை அச்சிடுதல், மற்றும் பகிர்ந்தளித்தல்.
6. கலைஞர்களை கௌரவிப்பதற்காக வருடாந்தம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற கலாபூசண விருது வழங்கும் வைபத்திற்கு தகுதிவாய்ந்த கலைஞர்களின் பெயர்களை சிபாரிசு செய்தல்.
7. முஸ்லிம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காக அவர்களின் ஆக்கங்களான புத்தகங்களை கொள்வனவு செய்து முஸ்லிம் பாடசாலை நூல் நிலையங்களுக்கு பகிர்ந்தளித்தல்.
8. முஸ்லீம் கலை மற்றும் கலாச்சாரத்தை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் திட்டங்களை அடையாளம் கண்டு செயல்படுத்துதல்.
9. பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்களுக்கும், முஸ்லிம் சமய நிறுவனங்களின் நிருவாக சபை உறுப்பினர்களுக்கும், பயிற்சிகளை பெற்றுக் கொடுத்தல்.
10. சர்வதேச அல்குர்ஆன் (கிராத்) ஓதல் மற்றும் மனனம் செய்யும் போட்டிகளுக்கு போட்டியாளர்களைத் தெரிவு செய்தல் மற்றும் வருடாந்தம் சவுதி அரேபியா, எகிப்து, மலேசியா மற்றும் துபாய் ஆகிய நாடுகளில் நடைபெறுகின்ற போட்டிகளில் அவர்களை பங்கேற்கச் செய்தல்.
11. முஸ்லிம் சமயத் தலைவர்களுக்கான (மௌலவிமார்) அடையாள அட்டை வழங்குதல் மற்றும் தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
12. வெளிநாடுகளில் இஸ்லாமிய உயர் கல்வியனை கற்பதற்கு மாணவர்களைத் தெரிவு செய்தல்.
13. புனித ரமழான் மாதத்தின் ஆரம்பம் மற்றும் நிறைவு தொடர்பில் அறிவிப்புச் செய்தல் மற்றும் ரமழான் மாதத்திற்காக முஸ்லிம் நாடுகளிலிருந்து இந்நாட்டுக்கு அன்பளிப்பாக அனுப்பப்படுகின்ற பேரீத்தம் பழங்களை மாவட்ட மட்டத்தில் குறித்த பள்ளிவாசல்கள் ஊடாக நாடு முழுவதிலும் வாழும் முஸ்லிம் மக்களுக்கு பகிர்ந்தளித்தல்.

1.4 நிறுவன ஒழுங்கமைப்பு



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

திணைக்களம் அதன் செயல்பாடுகளை கொழும்பைத் தலைமைக் காரியாலயமாக கொண்டு செயற்படுகின்றது. இதன் முக்கிய பிரிவுகள் ஐந்து (5) பின்வருமாறு:

1. நிருவாக மற்றும் அபிவிருத்திப் பிரிவு
2. நிதிப் பிரிவு
3. சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரிவு
4. வக்ப் பிரிவு
5. உள்ளக கணக்காய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவு

1. நிருவாக மற்றும் அபிவிருத்திப் பிரிவு

நிருவாகப் பிரிவின் பிரதான பணியாக இருப்பது, வினைத்திறன் மற்றும் விளைதிறன்மிக்க நிருவாக சேவைகள் மற்றும் திணைக்களத்திற்குத் தேவையான மனிதவளங்களைப் பெற்றுக் கொடுத்தல் போனறனவாகும்.

நிருவாகப் பிரிவின் பிரதான பணிகள்:

- உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், தாபித்தல் மற்றும் பதவி உயவர்வு வழங்குதல்.
- உத்தியோகத்தர்களின் அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை மேம்படுத்துதல்.
- உத்தியோகத்தர்களின் திறனை மேம்படுத்த பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல்.
- உத்தியோகத்தர்களின் சுயவிபரக் கோவைகளைப் பேணிவருதல் மற்றும் அவற்றைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.
- உத்தியோகத்தர்களின் லீவு பதிவேடுகளை பராமரித்தல்
- பதவியணி தொடர்பிலான தரவு முறைமையை பேணிவருதல்.
- அலுவலக கட்டிடத்தை சுத்தம் செய்தல், பராமரிப்புச் செய்தல் மற்றும் பாதுகாப்புச் சேவை தொடர்பிலான விடயங்கள்.
- வாகனங்களை பராமரிப்புச் செய்தல் மற்றும் போக்குரவத்து வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது சம்பந்தமான நடவடிக்கைகள்.
- ஏனைய நிறுவனங்கள் மற்றும் பொது மக்களிடம் கிடைக்கின்ற கடிதங்களை அறிக்கையிடும் முறைமை ஊடாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அனுப்பிவைத்தல் மற்றும் பின்னாய்வு செய்தல் மற்றும் முன்னேற்றம் பற்றி பணிப்பாளருக்கு அறிக்கையிடல்.
- திணைக்களப் பதவியணியின் ஒட்டுமொத்த நிருவாகம்.

2. நிதிப் பிரிவு

திணைக்களத்தின் நிதி வளத்தை முகாமை செய்தல் நிதிப் பிரிவின் பொறுப்பாகும். நிதிசார் செயற்பாடு, சொத்துக்களின் முகாமைத்துவம், நிதி அறிக்கையிடல், களஞ்சிய முகாமைத்துவம் மற்றும் பெறுகைச் சேவைகள் உட்பட பல்வேறு வகையான சேவைகள் இப்பிரிவினால் வழங்கப்படுகின்றன.

நிதிப் பிரிவின் பிரதான பணிகள்:

- வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டு வரைவைத் தயார் செய்தல்.
- வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளை தொடர்ச்சியாக கண்காணிப்புச் செய்தல்.
- வருடாந்த நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தல்.
- மாதாந்தம் வங்கி கணக்கிணக்ககூற்று அறிக்கைகளைத் தயாரித்தல் (அரசின் நிதி ஒதுக்கீட்டு கணக்கு, ஹஜ் நிதி மற்றும் முஸ்லிம் தர்ம நிதிக் கணக்குகள்).
- ஒவ்வொரு மாதமும் மாதாந்த இம்ப்ரெஸ்ட் கோரிக்கைக், கையிருப்பில் உள்ள மீதிகளின் அறிக்கை மற்றும் காடர் அறிக்கையை திறைசேரிகள் செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு சமர்ப்பித்தல்.
- வருடாந்த முற்பண ‘‘பி’’ கணக்கைத் தயார் செய்தல்.
- பொது வைப்புக் கணக்கினை பராமரித்தல்.
- புத்தகங்களில் வருமானம் மற்றும் செலவுகளை பதிவு செய்தல், ஆவணங்களை பராமரித்தல் மற்றும் ஹஜ் நிதி கணக்கு மற்றும் முஸ்லிம் தர்ம நிதிக் கணக்கிற்கான நிதிநிலை அறிக்கைகளைத் தயாரித்தல்.
- சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு நிதி அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.
- பெறுகை முகாமைத்துவம் மற்றும் துணைச் சேவைகளை வழங்குதல்.
- திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளுக்கும் மற்றும் கள உத்தியேகத்தர்களுக்கும் காகதாதிகளை வழங்குதல்.
- ஒவ்வொரு ஆண்டும் இருப்பிலுள்ள அனைத்துப் பொருட்களையும் சுற்றாய்வுச் சபை மதிப்பீடு செய்த பிறகு சுற்றாய்வுச் சபை மதிப்பீட்டு குழுவின் அறிக்கையை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல்.
- பாராளுமன்றத்தினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கான பதில்களை சமர்ப்பித்தல்.
- கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அரசாங்க கணக்குகள் குழுவின் கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளித்தல்.
- அரசாங்க கணக்குகள் குழுவுக்கு ஒன்லையின் முறையியல் ஊடாக தகவல்களை வழங்குதல்.

3. சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரிவு

திணைக்களம் மேற்கொள்ளும் சகல சமய மற்றும் கலாசார செயற்பாடுகளையும் முகாமைத்துவம் செயதல் சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரிவின் பொறுப்பாகும்.

சமய மற்றும் கலாசார அலுவல்கள் பிரிவின் பிரதான பணிகள்:

- 73 வது தேசிய சுதந்திர தின சமய நிகழ்ச்சி கொழும்பு-4 இல் உள்ள மஜ்மாஉல் ஹைராத் ஜும்மா பள்ளிவாசலில் நடைபெற்றது.
- ஹஜ் யாத்ரீகர்களின் பதிவு மற்றும் தரவைப் பராமரித்தல், மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகையைப் பெறுதல் மற்றும் வைப்புத் தொகையை மீளச் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொளளுதல்.
- அஹதியா தஹாம் பாடசாலை ஆசிரியர்களுக்கு சீருடை மற்றும் புத்தகக் கொடுப்பனவை வழங்குதல்.
- ரமழான் நோன்பு காலத்தில் பள்ளிவாசல்கள் மூலம் நாடு முழுவதும் உள்ள முஸ்லிம் குடும்பங்களுக்கு பேரீத்தம் பழங்களை விநியோகித்தல்.
- ”காலபூசனா” விருது விழாவிற்கு 10 முஸ்லிம் கலைஞர்களை பரிந்துரை செய்தல்.
- முஸ்லீம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காக முஸ்லிம் எழுத்தாளர்களால் வெளியிடப்பட்ட வெளியீடுகளை வாங்குதல் மற்றும் அவற்றை அஹதியா தஹாம் பள்ளிகள் மற்றும் முஸ்லிம் பள்ளிவாசல்களில் உள்ள நூலகங்களுக்கு வழங்குதல்.
- பதிவு செய்யப்பட்ட குர்ஆன் மதரஸாவுக்கு நிதி உதவி செய்தல்.
- **மிஹ்ராஜ் இரவு-** முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஏழு வானங்கள் வழியாக அல்லாஹ்தஆலாவை சந்திப்பதற்கு சென்ற இரவே மிஹ்ராஜ் இரவு என்று அழைக்கப்படுகின்றது. இந்த பயணத்தின் போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஐந்து வேலைத் தொழுகை பரிசாக வழங்கப்பட்டது. மிஹ்ராஜ் தின கொண்டாட்டம் மேற்படி நிகழ்வை நினைவுபடுத்துகிறது. 2021 ஆம் ஆண்டுக்கான மிஹ்ராஜ் தின விழாக் கொண்டாட்டம் கொழும்பு தெஹிவளை ஜும்மா பள்ளிவாசளில் 2021 மார்ச் 11 ஆம் திகதி நடைபெற்றது.
- கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சி - கவிதை மன்றங்களை நடாத்துதல் மற்றும் புத்தகங்களை வெளியிடுதல்.
- மத்ரசாக்களை மறுசீரமைத்தல் (அரபுக் கல்லூரிகள்)
- தலைப்பிரை பார்க்கும் குழுக் கூட்டத்தில் பங்கேற்றல்
- தேசிய மீலாத்-உன்-நபி நிகழ்ச்சிகளை நடாத்துதல்

4. வக்ப் பிரிவு

வக்ப் பிரிவின் முக்கிய நோக்கம் முஸ்லீம் பள்ளிகள் மற்றும் அறக்கட்டளை நிதியங்கள் தொடர்பான வக்ப் சட்டத்தின் ஏற்டபாடுகளை நடைமுறைப்படுத்துவதாகும்.

வக்ப் பிரிவின் பிரதான பணிகள்:

- அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பள்ளிவாசல்களின் விவகாரங்களை மேற்பார்வை செய்தல்.
- தேவைப்படும் போது பள்ளிவாசல்களில் நம்பிக்யைாளர்களைத் தெரிவு செய்ய / தேர்ந்தெடுக்க ஒரு பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்தல்.
- பள்ளிவாசல்களின் நம்பிக்யைாளர்களுக்கு நியமனச் சான்றிதழ் வழங்குதல்.
- பதிவுசெய்யப்பட்ட பள்ளிவாசல்கள் மற்றும் அறக்கட்டளைகளின் வருடாந்த நிதிநிலை அறிக்கைகளைப் பெறுதல், சரிபாரத்தல் மற்றும் முஸ்லிம் தர்ம நிதிக்கான (MCF) பங்களிப்பைச் சேகரித்தல்.
- பள்ளிவாசல்களின் நிருவாகம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் முறையீடுகளைத் தீர்ப்பது அல்லது வக்ப் சபைக்கு சமர்ப்பித்தல்.
- பதிவுசெய்யப்பட்ட பள்ளிவாசல்கள் மற்றும் அறக்கட்டளைகள் தொடர்பான தரவுத்தளத்தை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்.
- பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள் மற்றும் அறங்காவலர்களுக்கான கோவிட்-19 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை Zoom, Youtube and Facebook நடாத்தியமை.
- பதிவுசெய்யப்பட்ட அனைத்து பள்ளிவாசல்களின் சொத்துக்களை எவ்வாறு சேகரிப்பது என்பது குறித்து நம்பிகையாளர்களுடனான விழிப்புணர்வு கருத்தரங்கினை Zoom மூலம் நடாத்துதல்.
- **அபிவிருத்திப் பிரிவு**

  அபிவிருத்தித் திட்டங்களுக்கு திணைக்களத்தால் ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகப் பயன்படுத்துவது குறித்து திட்டமிடல், செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் ஆகியவை அபிவிருத்தி பிரிவின் முக்கிய பங்கு ஆகும். இரண்டு அபிவிருத்தி திட்டங்களும் பினவருமாறு:

1. அபிவிருத்திக் கருத்திட்டங்களின் மூலம் பள்ளிவாசல்கள் மற்றும் இஸ்லாமிய கலாசார நிலையங்களை நிர்மாணித்தல் / புனரமைப்புச் செய்தல்
2. மீளாத் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் ஊடாக பள்ளிவாசல்கள் மற்றும் இஸ்லாமிய கலாசார நிலையங்களை நிர்மாணித்தல் / புனரமைப்புச் செய்தல்

அபிவிருத்திப் பிரிவின் முக்கிய செயற்பாடுகள்

- பள்ளிவாசல்கள் மற்றும் இஸ்லாமிய கலாச்சார நிலையங்களிலின் நிர்மானம் / புனரமைப்பு செய்வதற்காக பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பம் கோருதல்.

- பள்ளிவாசல்கள், இஸ்லாமிய கலாசார நிலையங்களை புனரமைப்புச் செய்வதற்காக இலங்கையின் அனைத்து பகுதிகளிலும் உள்ள பள்ளிவாசல்கள் மற்றும் கலாச்சார நிலையங்களைத் தெரிவு செய்தல்.
- மீலாத்துன் நபி அபிவிருத்தித் திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட மாவட்டத்தில் பள்ளிவாசல்கள் மற்றும் கலாச்சார நிலையங்களை புனரமைத்தல்.
- மாவட்டச் செயலகங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல்.
- அமைச்சுக்கு காலாண்டுக்கு ஒரு முறை முன்னேற்ற அறிக்கையை சமர்ப்பித்தல்.
- கண்காணித்தல் மற்றும் பின்னூட்டல் செயற்பாட்டின் பிறகு அபிவிருத்தித் திட்டங்களின் இறுதி அறிக்கையை சமர்ப்பித்தல்.

5. உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுப் பிரிவு

திணைக்களத்தின் நடவடிக்கைகள் சம்பந்தமான நிதிசார் மற்றும் நிருவாக உள்ளகக் கட்டுப்பாட்டை முறையாகப் பேணிவருவதற்கு உள்ளக கணக்காய்வு முறைமையை ஏற்படுத்தல்.

உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுப பிரிவின் பிரதான பணிகள்:

- கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளித்தல்.
- வக்ப் சபைக்குக் கிடைக்கின்ற மனுக்களை அடிப்படையாகக் கொண்டு விசாரணை பற்றி அறிக்கையிடல்.
- முஸ்லீம் பள்ளிகள் மற்றும் அறக்கட்டளை நிதியங்களின் வருடாந்த கணக்காய்வுப் பரிசோதனைகளை நடாத்தல்.

இலங்கை வக்ப் சபை

பள்ளிவாசல்கள், shrines, religious resorts மற்றும் அறக்கட்டளைகளை பதிவு செய்தல், நம்பிக்கையாளர்களை நியமித்தல், பிரச்சினைகளைத் தீர்ப்பது, வழக்குகளை விசாரித்தல் மற்றும் உத்தரவு பிறப்பித்தல், வழிகாட்டுதல்கள், சுற்றறிக்கைகனை வெளியீடு செய்தல போன்றன வக்ப் சபையின் பொறுப்பாகும்.

இலங்கை வக்ப் சபை உறுப்பினர்களின் விபரம் வருமாறு:

1. திரு. சப்ரி ஹலிம்டீன் [LL.B, LLM, Senior Attorney at Law] - தவிசாளர்
2. கலாநிதி ஏ. உதுமாலெவ்வை [D I M S (Ceylon), D F C (USA)] - உறுப்பினர்
3. ஷெய்க் எம். அர்க்கம் நூராமித் [செயலாளர் - அ.இ.ஜ.உ] - உறுப்பினர்
4. திரு. முஹம்மட் சிராஜ் வாஹிட் [Chairman - Star Holdings International Pvt Ltd] - உறுப்பினர்
5. திரு. எம்.எப். பஸ்றுல் மௌலவி [முஸ்லிம் விவாக பதிவாளர் கண்டி] - உறுப்பினர்
6. திரு. ரபீக் இஸ்மாயீல் [முன்னால் பிரதி பணிப்பாளர்-மு.ச.ப.தி.] - உறுப்பினர்
7. திரு. ஷகீ அஹமட் [நிறைவேற்று குழு உறுப்பினர்-அ.இ.ஜ.உ.] - உறுப்பினர்

2021 ஆம் ஆண்டிற்கான இலங்கை வக்ப் சபையின் முன்னேற்றங்கள்:

- 24 வக்ப் சபைக் கூட்டம் நடாத்தப்பட்டுள்ளன.
- 128 பள்ளிவாசல்களுக்கு புதிய நம்பிகையாளர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.
- 87 பள்ளிவாசல்களின் முறையீடகள் விசாரனை செய்யப்பட்டன.
- மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட 6 வழக்குகளில் கலந்து கொண்டமை.

வக்ப் நியாயசபை

வக்ப் நியாயசபை நீதித்துறை ஆணையத்தால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களால் நிர்வகிக்கப்படுகிறது. இது மாதத்திற்கு இரண்டு அமர்வுகளை நடத்துகிறது.

வக்ப் நியாயசபை உறுப்பினர்களின் விபரம் வருமாறு:

1. கலாநிதி யு.எல்.ஏ. மஜீத் (ஓய்வுபெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி) - தவிசாளர்
2. திரு. ஏ.ஏ.எம். இல்யாஸ் (சனாதிபதி சட்டத்தரணி) - உறுப்பினர்
3. திரு. எம்.சீ.ஏ. அஸீஸ் (சிரேஷ்ட சட்டத்தரணி) - உறுப்பினர்

2020 ஆம் ஆண்டிற்கான வக்ப் நியாயசபையின் முன்னேற்றங்கள்:

- வக்ப் நியாய சபைக்கு 19 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.
- 33 வழக்குகள் தீர்க்கப்படாமல் 2021 ஆம் ஆண்டில் நிலுவையில் உள்ளன.

1.6 அமைச்சு/திணைக்களம்/மாகாண சபைகளின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள் /நிதி

எமக்கு நிதி கிடைத்திருப்பது திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திடமிருந்து மாத்திரமாகும்.

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (இருப்பின்)

பொறுத்தமற்றது

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால கண்ணோட்டம்

2.1 சிறப்பு அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

பொதுச் செலவின மதிப்பாய்வுக் குழுவினால் 31.08.2021 திகதியின் அமைச்சரவை முடிவு 21/1596/304/134 இன் படி ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 196 மில்லியனில் ரூபா 21.50 மில்லியன் சேமிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 196 மில்லியனில் உண்மையாக ஏற்பட்ட செலவு ரூபா 155.11 மில்லியன் ஆகும். இது மொத்த செலவினங்களில் நிதிச் செயற்பாட்டு விகிதம் 79% ஆகும்.

2021 ஆம் ஆண்டின் விஷேட அடைவுகள்

- பள்ளிவாசல்கள், அறக்கட்டளை நிதியம், ஸாவியா மற்றும் ஏனைய இஸ்லாமிய கலாச்சார நிறுவனங்களின் நம்பிக்கையாளர்களுக்கு நம்பிக்கைப் பொறுப்புக்கனை எவ்வாறு நிர்வகிப்பது தொடர்பான 17 தரநிலை நடைமுறை (Standard of Procedure) வழிகாட்டுதல்களை உருவாக்கியது.
- ஒன்றாக வாழ்வதே உண்மையான சுதந்திரம் என்ற தலைப்பில் தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு கவியரங்கம் நடைபெற்றது.
- புனித நபி (ஸல்) அவர்களின் பிறந்த நாளை நினைவுகூரும் வகையில மீலாத்-உன்-நபி தேசிய விழா நடத்தப்பட்டது.
- ரமலான் நோன்பு காலத்தில் சவூதி அரேபியாவினால் 75 மெட்ரிக் டொன் பேரீச்சம்பழங்கள் நன்கொடையாகப் பெறப்பட்டு இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள முஸ்லிம் குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.
- 311 தஹாம் பாடசாலைகளின் 2762 தஹாம் பாடசலை பெண் ஆசிரியர்களுக்கு சீருடை வழங்கப்பட்டது.
- 311 தஹாம் பாடசாலைகளைச் சேர்ந்த 4318 தஹாம் பாடசாலை ஆசிரியர்களுக்கு புத்தகக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.
- 23 முஸ்லிம் புத்தக எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.
- சமயங்களுக்கிடையிலான சகவாழ்வு நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் இரண்டு செயலமர்வுகள் webinars மூலம் நடத்தப்பட்டன. இந்த அமர்வுகளில் பௌத்த, இந்து, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய மத குருமார்கள் கலந்துகொண்டனர்.
- முஸ்லிம் ஆன்மிக தலைவர்களை அறிமுகப்படுத்தும் வகையில் 3 வலைதள நிகழ்ச்சிகள் நடைபெற்றன.
- இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள இஸ்லாமிய நிலையங்களின் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 44 பள்ளிவாசல்கள் புனரமைக்கப்பட்டன.
- நுவரெலியா மாவட்டத்தில் 28 பள்ளிவாசல்கள் மீலாத்-உன்-நபி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டது.

- கோவிட் -19 பரவுவதைத் தடுப்பதற்காக இலங்கையில் உள்ள முஸ்லீம் பள்ளிவாசல்கள், ஸாவியாக்கள், தக்கியாக்கள், முஸ்லீம் Shrines, Spiritual resorts, மதரஸாக்கள், அரபிக் கல்லூரிகள் மற்றும் முஸ்லீம் அறக்கட்டளை நிதியங்கள் ஆகியவற்றின் நிர்வாகிகள் மற்றும் நிர்வாக அமைப்புகள் மூலம் நம் நாட்டில் உள்ள முஸ்லீம்களுக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டது.
- தெஹிவளை பள்ளிவாசலில் மேல் மாகாணத்தில் உள்ள 60 மௌலவிகளுக்கு வெள்ளிக்கிழமை ஜும்மா நடத்துவது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.
- அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பள்ளிவாசல்கள், நம்பிக்கை நிதியங்கள் மற்றும் இஸ்லாமிய கலாச்சார அமைப்புகளின் நம்பிக்கையாளர்களுக்குகு வக்.ப் சட்டம் மற்றும் தேசிய பாதுகாப்பு குறித்து 25 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- கோவிட்-19 தொற்றுநோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஹதீஸ்களில் ஓதப்பட்ட வசனங்களை பதாகைகளில் காண்பிப்பதன் மூலம் பள்ளிவாசல்கள் மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- கோவிட்-19 காலத்தில், பள்ளிவாசல்களில் சம்பளம் வழங்கப்படாத 252 மௌலவிகளுக்கு ரூபா 1,260,000 மதிப்புமிக்க ரூபா 5000 பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் சதொச ஊடாக விநியோகிக்கப்பட்டன.
- கிழக்கு மாகாணத்தில் பகீர் பைத், கசீதா மற்றும் பொல்லடியை மேம்படுத்தும் பாரம்பரிய முஸ்லிம் கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளுக்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.
- கல்வி அமைச்சுடன் இணைந்து குர்ஆன் மத்ரஸாக்களுக்கு 8 கூட்டங்கள் நடத்தப்பட்டன.
- **தேசிய மீலாத்-உன்-நபி திட்டம் - 2021**

  2021 ஆம் ஆண்டிற்கான தேசிய மிலாத்-உன்-நபி திட்டம், "பிரபஞ்சத்திற்கு ஒரு கருணையாக" என்ற கருப்பொருளின் கீழ் அனைத்து COVID-19 விதிமுறைகள்/ வழிகாட்டுதல்களுக்கு இணங்க பின்வரும் திட்டங்களை ஒழுங்கமைத்து செயல்படுத்தியது.

2021 ஆம் ஆண்டிற்கான தேசிய மீலாத்-உன்-நபி திட்டத்தின் முன்னேற்றங்கள்

இல.	போட்டியின் பெயர்	பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை	வெற்றி பெற்றோர்களின் எண்ணிக்கை
1	கிராத் போட்டி	2388	18
2	பேச்சுப் போட்டி (சிங்களம், ஆங்கிலம் மற்றும்	831	54
3	அதான் போட்டி	44	10
4	கவிதைப் போட்டி	139	10
5	மீலாத் விழா வீடியோ போட்டி	57	10
மொத்தம்		**3459**	**102**

2021 ஆம் ஆண்டில் எதிர்கொண்ட சவால்கள்

- மூலதனச் செலவினங்களுக்காக கிடைக்கும் நிதி பொதுத் திறைசேரியனால் அதிகரிக்கப்படல் வேண்டும்.
- பள்ளிவாசல்கள் மற்றும் கலாச்சார இடங்களுக்களின் அபிவிருத்திப் பணிகளுக்கு போதிய நிதி இல்லாமை.
- பள்ளிவாசல்களின் பதிவு மற்றும் ஏற்கனவே உள்ள தரவுகளை திருத்துதல்.
- நம்பிக்கையாளர் சபை தெரிவுகளை நடாத்த இயலாமை.
- கலை, இலக்கியம் மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்களை செயல்படுத்த இயலாமை.
- 6 பதவி நிலை உத்தியோகத்தர்களின் பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளன.

எதிர்கால இலக்குகள்

- வக்ப் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக முகாமைத்துவ தகவல் முறைமையை உருவாக்குதல்.
- திணைக்களத்துக்கான தந்திரோபாய திட்டம் தயாரித்தல்.
- கலை மற்றும் கலாச்சாரப் பிரிவை நிறுவுதல்.
- SLAS அல்லாத 2 உதவி பணிப்பாளர்களை நியமித்தல்.
- சட்ட உத்தியோகத்தரை நியமித்தல்.
- தொழில்நுட்ப உத்தியோகத்தரை நியமித்தல்.

அத்தியாயம் 03 – 2021 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- எப்

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

பாதீட்டு 2021		குறிப்பு	உண்மை நிலை 2021	திருத்தப்பட்ட 2020	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
168,400,000	திறைசேரி பணிமுற்பணங்கள்		128,003,000	122,189,000	ஏசீஏ-3
19,406,000	வைப்புகள்		86,440	9,998,341	ஏசீஏ-4
4,500,000	முற்பணக் கணக்குகள்		3,308,494	3,933,193	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	2,723,090	
192,306,000	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**131,397,934**	**138,843,624**	
192,306,000	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**131,397,934**	**138,843,624**	
-	**திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)**		-		
192,306,000	**தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)**		**131,397,934**	**138,843,624**	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	
60,800,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	60,136,336	46,896,719	
51,050,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	35,688,420	35,077,246	ஏசீஏ-2(ii)
44,650,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	33,754,807	41,700,734	
400,000	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
-	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	-	-	
156,900,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**129,579,563**	**123,674,698**	
	மூலதனம் செலவினம்				
11,300,000	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	318,977	1,199,999	
11,800,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	10,197,273	10,315,746	
-	மூலதன மாற்றல்கள்	12	-	-	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
1,000,000	திறன் விருத்தி	14	510,397	785,009	
15,000,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	14,506,613	12,722,631	
39,100,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**25,533,259**	**25,023,385**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		**1,056,715**	9,768,023	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		**2,937,056**	3,141,300	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		**3,993,772**	**12,909,323**	
				-	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		**159,106,594**	**161,607,406**	
-	**டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)**		**(27,708,660)**	**(22,763,782)**	
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி		(27,738,660)		ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		30,000	-	ஏசீஏ-3
			(27,708,660)		

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2021 ரூபா	2020 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	355,831,631	355,324,627
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	7,979,312	8,350,749
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	30,000	202,065
மொத்த சொத்துக்கள்		**363,840,943**	**363,877,442**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(10,453,604)	(11,052,442)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		355,831,631	355,324,627
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	-	-
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	18,432,916	19,403,191
நீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	30,000	202,065
மொத்தப் பொறுப்புக்கள்		**363,840,943**	**363,877,442**

பக்க இலக்கம் ...8.... முதல் ....54.... வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் பக்க இலக்கம் ...55.... முதல் ..62... வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்
பெயர்:	பெயர்:	பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பதவி :	பதவி :	பெயர் :
திகதி : 2022-2-24	திகதி : 24/2/2022	திகதி : 2022/2/24

K.L.D.N. Piyal
Accountant (Acting)
Department of Muslim Religious & Cultural Affairs
Colombo 10.

இப்ராஹிம் அன்ஸார்
பணிப்பாளர்
முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
180, ரி.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு - 10

Deshabandu Prof. Kapila Gunawardhane
Secretary
Ministry of Buddhasasana, Religious and Cultural Affairs
No. 135, "Dahampaya",
Srimath Anagarika Dharmapala Mawatha,
Colombo 07.

2

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீவு- சீ

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2021 ரூபா	திருத்தப்பட்ட 2020 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	78,626
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	4,288,267	-
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	128,003,000	119,480,000
முற்பணங்களை அறவிடல்	3,043,358	16,250
வைப்புக்களின் பெறுகை	86,440	1,714,341
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**135,421,065**	**121,289,217**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	95,506,795	79,233,530
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	33,754,807	32,256,739
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	-	265,788
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	-	212,692
முற்பணக் கொடுப்பனவு	3,603,369	2,081,330
வைப்புக் கொடுப்பனவு	1,056,715	478,251
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**133,921,688**	**114,528,331**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**1,499,378**	**6,760,885**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	1,469,378	6,861,850
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**1,469,378**	**6,861,850**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(1,469,378)**	**(6,861,850)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	**30,000**	**(100,965)**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	**30,000**	**(100,965)**
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	**303,030**
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	**30,000**	**202,065**

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1. 2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமான செலவினத்தின் சுருக்கம்

ஏசீஏ - 2

2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலமான செலவினத்தின் சுருக்கம்

செலவின தலைப்பு இல : 202 திணைக்களத்தின் பெயர் : முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

ரூபா

வருடாந்த மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிகழ்ச்சித் திட்ட இல.	செலவினத் தலைப்பு	வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடு (1)	குறைநிரப்பு மதிப்பீட்டு ஏற்பாடு (2)	நிஒ 66/69 மாற்றல்கள் (3)	மொத்தத் தேறிய ஒதுக்கீடு (4)=(1)+(2)+(3)	மொத்தச் செலவினம் (5)	தேறிய பெறுபேறு மீதி / மேலதிகம் (6)=(4)-(5)
நிகழ்ச்சித் திட்டம் (1)	(1) மீண்டுவரும்	-	-	-	-	-	-
	(2) மூலதனம்	-	-	-	-	-	-
	உப மொத்தம்	-	-	-	-	-	-
நிகழ்ச்சித் திட்டம் (2)	(1) மீண்டுவரும்	156,900,000	-	4,350,000 (4,350,000)	156,900,000	129,579,563	27,320,437
	(2) மூலதனம்	39,100,000	-	-	39,100,000	25,533,259	13,566,741
	உப மொத்தம்	**196,000,000**	-	-	**196,000,000**	**155,112,822**	**40,887,178**
	முழு மொத்தம்	**196,000,000.0**	-	-	**196,000,000.0**	**155,112,822.1**	**40,887,178**

2. செலவுகள்

ஏசீஏ-2(ii)

2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 202 **திணைக்களத்தின் பெயர் : முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**

ரூபா

செலவினக் குறியீடு	ஏற்பாடுகள்	செலவினம்	தேறிய விளைவு		
	மொத்தத் தேறிய ஏற்பாடு	மொத்தச் செலவினம்	சேமிப்பு / மிகை	திருத்தப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு / மிகை	வேறுபாட்டுக்கான காரணம்
	(4)=(1)+(2)+(3)	(7)= (5)+(6)	(8)=(4)-(7)	(9)=(8)/(4)*100	
மீண்டுவரும் செலவினம்					
நிகழ்ச்சித் திட்டம் (1)					
நிகழ்ச்சித் திட்டம்./கருத்திட்டம்/உப கருத்திட்டம்/ குறியீடு					
குறிப்பு - 5 - கூலி, சம்பளம் மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்					
செலவு விடயரீதியான வகுப்பீடு					
ஆளுக்குரிய வேதனங்கள்					
1001 சம்பளமும் கூலியும்	44,000,000	43,745,823	254,177	1	நான்கு ஊழியர்கள் ஓய்வு பெற்றதுடன் 3 ஊழியர்கள் பதவியை ராஜினாமா செய்தனர்.
1002 மேலதிக நேர மற்றும் ஏனைய படிகள்	1,600,000	1,208,443	391,557	24	
1003 ஏனைய கொடுப்பனவுகள்	15,200,000	15,182,070	17,930	0	
	60,800,000	60,136,336	663,664	1	
குறிப்பு - 6 - செலவு விடயரீதியான ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள்					
பிரயாணச் செலவினம்					
1101 உள்ளூர்	1,200,000	828,294	371,706	31	அமைச்சரவை முடிவின்படி கட்டாய சேமிப்பு.
1102 வெளிநாடு	-	-	-	0	
மொத்தம் (அ)	1,200,000	828,294	371,706	31	
வழங்கல்கள்					
1201 எழுதுகருவிகளும் அலுவலக உபகரணங்களும்	2,400,000	2,240,949	159,051	7	அமைச்சரவை முடிவின்படி கட்டாய சேமிப்பு.
1202 - எரிபொருள்	1,750,000	1,718,382	31,619	2	
1203 உணவும் சீருடைகளும்	250,000	156,156	93,844	38	
1204 மருத்துவ வழங்கல்கள்	-	-	-	-	
1205 ஏனையவை	-	-	-	-	
மொத்தம் (ஆ)	4,400,000	4,115,486	284,514	6	
பராமரிப்புச் செலவினங்கள்					
1301 வாகனங்கள்	1,500,000	995,484	504,516	34	அமைச்சரவை முடிவின்படி கட்டாய சேமிப்பு.
1302 பொறி, இயந்திரம், உபகரணம்	300,000	300,000	-	0	
1303 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	500,000	223,197	276,803	55	
மொத்தம் (இ)	2,300,000	1,518,681	781,319	34	
சேவைகள்					
1401 போக்குவரத்து	300,000	85,870	214,130	71	
1402 தபால், தொலைத்தொடர்பு	1,200,000	999,016	200,984	17	அமைச்சரவை முடிவின்படி கட்டாய சேமிப்பு.
1403 மின்சாரமும் நீரும்	4,000,000	1,137,899	2,862,101	72	
1404 வாடகையும், உள்ளூராட்சி சபைகளுக்கான வரியும்	800,000	606,668	193,332	24	
1406 குத்தகை வாகணங்களுக்கான வட்டி	-	-	-	0	
1407 அரசாங்க முதலீட்டை மேற்கொள்வதன் செலவு					
1408 செயற்பாட்டுக் குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான குத்தகைத் தவணை	-	-	-	0	
1409 ஏனையவை	36,850,000	26,396,506	10,453,494	28	அமைச்சரவை முடிவின்படி கட்டாய சேமிப்பு.
மொத்தம் (ஈ)	43,150,000	29,225,958	13,924,042	32	
ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான மொத்தச் செலவினம் (அ+ஆ+இ+ஈ)	51,050,000	35,688,420	15,361,580	30	

ஏசீஏ-2(ii)

2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 202 திணைக்களத்தின் பெயர் : முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

ரூபா

செலவினக் குறியீடு	ஏற்பாடுகள்	செலவினம்	தேறிய விளைவு		
	மொத்தத் தேறிய ஏற்பாடு	மொத்தச் செலவினம்	சேமிப்பு / மிகை	திருத்தப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு / மிகை	வேறுபாட்டுக்கான காரணம்
	(4)=(1)+(2)+(3)	(7)= (5)+(6)	(8)=(4)-(7)	(9)=(8)/(4)*100	
மீண்டுவரும் செலவினம்					
குறிப்பு - 7 - செலவு விடயரீதியான மாற்றங்கள், நன்கொடைகள், மானியங்கள்					
மாற்றங்கள்					
1501 நலன்புரி நிகழ்ச்சித்திட்டம்	44,500,000	33,741,737	10,758,263	24	அமைச்சரவை முடிவின்படி கட்டாய சேமிப்பு.
1502 ஓய்வூதிய பணிக்கொடைகள்	-	-	-	0	
1503 பொது நிறுவனங்கள்	-	-	-	0	
1504 அபிவிருத்தி மானியங்கள்	-	-	-	0	
1505 - சந்தா மற்றும் பங்களிப்புக் கட்டணங்கள்	-	-	-	0	
1506 அரசாங்க ஊழியர்களுக்கான உடமைக் கடன் வட்டி	150,000	13,070	136,930	91	அமைச்சரவை முடிவின்படி கட்டாய சேமிப்பு.
1507 மாகாணசபைகள்	-	-	-	0	
1508 ஏனையவை	-	-	-	0	
1509 பொது நிறுவனங்கள் (ஏனைய செயற்பாட்டுச் செலவுகள்)	-	-	-	0	
மொத்தம்	44,650,000	33,754,807	10,895,193	24	
குறிப்பு - 8 - செலவு விடயரீதியான வட்டிக் கொடுப்பனவுகள்					
1601 உள்ளூர்க் கடன்கள்	-	-	-	0	
1602 வெளிநாட்டுக் கடன்கள்	-	-	-	0	
1603 திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரிப் பிணையின் குறைந்த விலை	-	-	-	0	
மொத்தம்	-	-	-	0	
குறிப்பு - 9 - செலவு விடயரீதியான ஏனைய மீண்டுவரும் செலவினம்					
1701 நட்டங்களும் பதிவழிப்பும் நிகழத்தக்க சேவைகள்	200,000	-	200,000	100	அமைச்சரவை முடிவின்படி கட்டாய சேமிப்பு.
1702 நிகழத்தக்க சேவைகள்	-	-	-	0	
1703 அலுவலக மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல்	200,000	-	200,000	100	அமைச்சரவை முடிவின்படி கட்டாய சேமிப்பு.
மொத்தம்	400,000	-	400,000	100	
நிகழ்ச்சித் திட்டம் (1)					
முழு மொத்தம் (குறிப்பு 5 முதல் 9 வரை) மொத்த மீண்டுவரும் செலவினம்	156,900,000	129,579,563	27,320,437	17	

ஏசீஏ-2(ii)

2021 டிசம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான செலவினக் கூற்று

செலவின தலைப்பு இல : 202 திணைக்களத்தின் பெயர் : முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

ரூபா

செலவினக் குறியீடு	ஏற்பாடுகள்	செலவினம்	தேறிய விளைவு		
	மொத்தத் தேறிய ஏற்பாடு	மொத்தச் செலவினம்	சேமிப்பு / மிகை	திருத்தப்பட்ட மதிப்பீட்டின் % சதவீதமாக சேமிப்பு / மிகை	வேறுபாட்டுக்கான காரணம்
	(4)=(1)+(2)+(3)	(7)= (5)+(6)	(8)=(4)-(7)	(9)=(8)/(4)*100	
மூலதனம் செலவினம்					
நிகழ்ச்சித் திட்டம் (1)					
பொது முதலீடுகளின் செலவு விடயரீதியான வகுப்பீடு					
குறிப்பு - 10 மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்					
2001 கட்டிடங்களும் கட்டமைப்புக்களும்	6,500,000	-	6,500,000	100	அமைச்சரவை முடிவின்படி கட்டாய சேமிப்பு.
2002 பொறி, இயந்திரம், உபகரணம்	4,000,000	69,120	3,930,880	98	
2003 வாகனங்கள்	800,000	249,857	550,143	69	
மொத்தம் (அ)	11,300,000	318,977	10,981,023	97	
குறிப்பு - 11 மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு					
2101 வாகனங்கள்	-	-	-	0	
2102 தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும்	1,800,000	640,004	1,159,996	64	அமைச்சரவை முடிவின்படி கட்டாய சேமிப்பு.
2103 பொறி, இயந்திரம், உபகரணம்	-	-	-	0	
2104 கட்டிடங்களும், கட்டமைப்புக்களும்	10,000,000	9,557,269	442,731	4	
2105 காணியும், காணி மேம்படுத்தலும்	-	-	-	0	
2106 மென்பொருள் அபிவிருத்தி	-	-	-	0	
2108 குத்தகை வாகனங்களுக்கான மூலதன கொடுப்பனவு	-	-	-	0	
மொத்தம் (ஆ)	11,800,000	10,197,273	1,602,727	14	
குறிப்பு -12 மூலதன மாற்றங்கள்					
2201 பொது நிறுவனங்கள்	-	-	-	0	
2202 அபிவிருத்தி உதவிகள்	-	-	-	0	
2203 மாகாண சபைகளுக்கான பங்களிப்பு	-	-	-	0	
2204 வெளிநாடுகளுக்கான மாற்றங்கள்	-	-	-	0	
2205 அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான மூலதன நன்கொடை	-	-	-	0	
மொத்தம் (இ)	-	-	-	0	
குறிப்பு - 13 நிதிச் சொத்துக்களின் கொள்வனவு					
2301 உரிமைப் பங்குக்கான பங்களிப்பு	-	-	-	0	
2302 மீள் கடன்கள்	-	-	-	0	
மொத்தம் (ஈ)	-	-	-	0	
குறிப்பு - 14 மனித வள அபிவிருத்தி					
2401 பயிற்சியும், இயலளவு கட்டியெழுப்புதலும்	1,000,000	510,397	489,603	49	அமைச்சரவை முடிவின்படி கட்டாய சேமிப்பு.
மொத்தம் (உ)	1,000,000	510,397	489,603	49	
குறிப்பு - 15 ஏனைய மூலதனச் செலவினங்கள்					
2501 மறுசீரமைப்பு	-	-	-	0	
2502 ஏனைய முதலீடுகள்	-	-	-	0	
2503 ஏதிர்பாராச் சேவைகள்	-	-	-	0	
2504 மாகான சபைகளின் ஏனைய	-	-	-	0	
2505 திட்டமிடல்களைத் தயாரித்தல்	-	-	-	0	
2506 உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி	15,000,000	14,506,613	493,387	3	
2507 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	-	-	-	0	
2509 ஏனையவை	-	-	-	0	
மொத்தம் (ஊ)	15,000,000	14,506,613	493,387	3	
நிகழ்ச்சித் திட்டம் (1)					
பொது முதலீட்டின் மீதான மொத்தச் செலவினங்கள் (அ+ஆ+இ+ஈ+உ+ஊ)	39,100,000	25,533,259	13,566,741	35	
முழு மொத்தம் (குறிப்பு 5 - 15)	196,000,000	155,112,822	40,887,178	21	

3. பணி முற்பணக் கணக்குகள்

ஏசீஏ-3

2021 ஆம் ஆண்டிற்கான பணி முற்பண கணக்கின் அறிக்கை

திணைக்களத்தின் பெயர் : முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
செலவினத் தலைப்பு இல : 202

ரூபா

முற்பணக் கணக்கு இலக்கம்	2021 சனவரி 1 இல் உள்ளவாறு பணி முற்பண மீதி 1			கிடைக்கப்பெற்ற பணிமற்பணம் 2			தீர்க்கப்பட்ட பணிமற்பணம் 3			2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பணி முற்பண மீதி 4			2021 டிசம்பர் 31இல்உள்ளவாறான நிறுவன புத்தகங்களின் படி பணமுற்பண மீதி	2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரிப் புத்தகங்களின் படி
	கொடுத்துத் தீர்க்காத உப முற்பணம் 1(i)	தீர்க்கப்படாத பணிமுற்பணங்கள் (தீர்க்கப்படாத உப பணிமுற்பணங்கள் தவிர்ந்த) 1(ii)	மொத்தம் 1(iii)	திறைசேரி 2(i)	ஏனைய மூலங்கள் 2(ii)	மொத்தம் 2(iii)=2(i)+2(ii)	செலவினம் 3(i)	காசு 3(ii)	மொத்தம் 3(iii)=3(i)+3(ii)	தீர்க்கப்படாத உப பணிமற்பண மீதி 4(i)	தீர்க்கப்படாத பணிமுற்பணங்கள் 4(ii)	மொத்தம் 4(iii)=4(i)+4(ii)	*5 5=1(iii)+2(iii)-3(iii)	6
7.002E+10	-	-	-	128,003,000	658,865	**128,661,865**	128,631,865	-	**128,631,865**	30,000	-	**30,000**	**30,000**	**30,000**

1. மேலே 4 மற்றும் 6 மீதிகளுக்கிடையிலான

(1) பணம் அனுப்பப்பட்ட போதிலும் திறைசேரிப் புத்தகங்களில் காட்டப்படாத 2021.12.31 திகதியன்று பண மீதி .....

(2) ஏனைய காரணங்கள்- ....

இந்த மீதிகள் அறிக்கையை முடிவுறுத்தும் போது கொடுத்துத் தீர்க்கப்பட்டிருப்பின் அது பற்றியும் அவ்வாறில்லையெனில் காரணங்களையும் குறிப்பிடுக.

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானவை என சான்றுப்படுத்துகிறேன்.

4. வைப்புக் கணக்கு

ஏசீஏ -4

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக் கணக்குகளின் கூற்று

செலவின தலைப்பு இல : 202 திணைக்களத்தின் பெயர் : முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

ரூபா

வைப்புக் கணக்குகளின் பெயர்	வைப்பு இலக்கம்	2021 சனவரி 1 இல் உள்ளவாறு மீதி	வருடக் காலப்பகுதியில் வரவு வைக்கப்பட்டது	வருடக் காலப்பகுதியில் பற்று வைக்கப்பட்டது	2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி	திறைசேரிப் புத்தகங்களின்படி 2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மீதி
நிர்மாணத்திற்காக வைத்திருந்த பணம்	6000-0-0-16-0094	17,415,648	-	-	**17,415,648**	**17,415,648**
நட்டாடு	6000-0-0-17-.....					
நியதிச் சட்டமுறைக் கொடுப்பனவுகளுக்காக தற்காலிகமாக வைத்திருந்த பணம்	6000-0-0-18-0097	1,987,543	86,440	1,056,715	**1,017,268**	**1,017,268**
மானியம் (உள்நாடு)- நிறுவன சமூகப் பொறுப்பு	6000-0-0-19-.....					
செலவினத்தின் மீள்நிரப்பலுக்காகக் கிடைத்த நிதி	6000-0-0-20-.....					

5. முற்பணக் கணக்குகள்

ஏசீஏ- 5

2021 டிசம்பர் 31 இல் உள்ளவாறு முற்பணக் கணக்குகள் கூற்று

செலவின தலைப்பு இல : 202 திணைக்களத்தின் பெயர் : முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

ரூபா

